1987 நவம்பர் 11]

நலத் துறை மூலமாக ஏதாவது நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறதா? அப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தால் அதனுடைய விவரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

தலைஞாயிறில் ஆதி திராவிட மாணவர் விடுதி.

59—(*வினா எண் 11910) **திரு. மா. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், தலைஞாயிறில் ஆதி திராவிட மாணவர் விடுதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். பயிற்சி நிலையம்.

60—(*வினா எண் 13892) **திரு. செ. இரத்தினவேலு மற்றும் திரு. சா. ஞானசுந்தரம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர் நலத்துறை மூலம் நடத்தப்படுகின்ற ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். பயிற்சி நிலையத்தில் பயின்ற மாணவ—மாணவியர்களில் கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக யாரும் தேர்ச்சி பெறவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பெற்ற நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.